**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 132 of 2018**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : சந்தோஷ்** | **Father/Husband's Name: குமார்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 07.06.2023**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் மதனபுரம், அடிவாரத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். 23.10.2015 ம் தேதி சுமார் மதியம் 2 மணி போல் இருக்கும். எனது தங்கை வளைகாப்பிற்காக எனது வீட்டில் இருந்த போது எனது மச்சான் சுரேஷ்குமார் எனது தங்கையை பார்த்து விட்டு அவரது இருச்சக்கர வாகனமான வெள்ளை நிற அப்பாச்சி வாகனத்தில் TN 41 AA 3326 என்ற வாகனத்தில் பழனியிலிருந்து உடுமலைபேட்டை செல்வதற்காக சென்ற போது காரமடை நீர்மட்டம் என்ற இடத்தில் அவருக்கு எதிரே வந்த அரசு டவுன் பஸ் TN 57 N 1413 என்ற வாகனம் உடுமலையிலிருந்து பழனி நோக்கி வந்த அந்த வண்டி எதிரே சென்ற என் மச்சான் சென்ற வண்டி மீது மோதி விபத்து ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்து விட்டார். தற்செயலாக பழம் வாங்க சென்ற நான் சென்று பார்த்த போது என் மச்சான் என தெரிந்தது. நானும், பூபாலனும் நகர காவல்நிலையம் சென்று அங்கு நான் புகார் கொடுத்தேன். தற்போது காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியை சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2. விபத்து சம்பந்தமான புகார் அ.சா.ஆ.1 யை முருகேசன் என்கிற சார்பு ஆய்வாளர் எழுதினார். அவர் எழுதிய புகாரில் நான் கையொப்பம் போட்டேன். புகாரில் உள்ள

விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் நடந்ததை சொன்னேன். அவர் அதை எழுதினார். மற்றபடி என்ன எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் போட்டேன். நான் பழனி பஸ் ஸ்டாண்ட் வெளியே உள்ள பழக்கடையில் சம்பவ சமயத்தில் நான் வேலை பார்த்து வந்தேன். தற்செயலாக காரமடை நீர்மட்டம் என்ற இடத்திற்கு நானும், பூபாலன் என்பவரும் சென்ற போது கூட்டமாக இருந்தது. அப்போது பார்த்த போது எனது மச்சான் என்று தெரிய வந்தது.

3. நான் பழம் வாங்க சென்ற கடைக்கும், சம்பவயிடத்திற்கும் இடையே 100 மீட்டர் இடைவெளி இருக்கும். நான் வீட்டில் இருந்து அந்த கடைக்கு பழம் வாங்க சென்றேன். நான் ஸ்கூட்டி வாகனத்தில் சம்பவயிடத்திற்கு சென்றேன். வண்டி எண் ஞாபகம் இல்லை. ஸ்கூட்டியை நான் தான் ஓட்டி சென்றேன். சுரேஷ்குமாருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது. பணி முடிந்து மது அருந்துவார். பணி நேரத்தில் அருந்த மாட்டார். விபத்து நடந்த சமயத்தில் சுரேஷ்குமார் மது அருந்தி இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் மது அருந்தவில்லை. எனது மச்சான் சென்ற இருச்சக்கர வாகனத்தில் அவர் மட்டும் தான் சென்றார். டவுன் பஸ்சின் வழிதடை எண் எனக்கு தெரியவில்லை. டவுன் பஸ்சின் பதிவு எண் எனக்கு தெரியும். மேற்படி பேருந்து எங்கிருந்து எங்கு சென்ற வாகனம் என்பதை நான் கவனிக்கவில்லை.

4. சம்பவம் நடந்த இடத்திற்கும் காரமடை பேருந்து நிறுத்ததிற்கும் எவ்வளவு துூரம் என்றால் தொலைவை குறிப்பிட்டு என்னால் கூற இயலாது. விபத்து நடந்த பிறகு கூட்டமாக இருந்ததை பார்த்து தான் நான் சம்பவயிடத்தை பார்த்தேன். விபத்து நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றும், கூட்டமாக இருந்ததை பார்த்து சம்பவயிடத்தை பார்த்த போது தான் அங்கு இருந்தது எனது மச்சான் என்பது எனக்கு தெரியவந்தது. எனது மச்சான் அங்கு அடிப்பட்டு இருந்ததால் நான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2023.06.09 16:35:34 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி**